கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை : திரு. V.இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல், எல்.எல்.எம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ) சிவகங்கை.
2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7–ம் நாள் வெள்ளிக்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண்.1416/2026
இன்
S.C.No:29/2026
CNR.No.TNSV01002201–2026
****

சக்திவேல், (A1),
த/பெ.முத்துகுமார்,
புதுப்பட்டி, சக்கந்தி அஞ்சல்,
சிவகங்கை மாவட்டம். ...எதிரி

/ எதிர் /

அரசுக்காக அதன் காவல் சார்பு ஆய்வாளர்
சிவகங்கை டவுன் காவல் நிலையம்,
குற்ற எண்.92/2022 ...சட்டநிலை புகார்தாரர்

இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.கருப்பையா, அவர்களும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.P.முத்து முனியாண்டி அவர்களும் ஆஜராகியுள்ளனர். இவ்வழக்கு என் முன்பு இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு பரிசீலக்கப்பட்டு, இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**உ த் த ர வு**

இம்மனுவானது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 342, 307, 302, 120(b), 149, 449–ன் கீழ் மனுதாரர்/எதிரி தரப்பில் சிவகங்கை டவுன் காவல் நிலைய குற்ற எண்.92/2022–ல் பிணை வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இங்வழக்கானது அமர்வு வழக்கு எண்.29/2026 ஆக எண்ணிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்காக நிலுவையில்

RAMALINGAM V Digitally signed by RAMALINGAM V Date: 2026.08.07 15:30:10 +0530

இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் மனுதார்/எதிரி ஆஜராகாகத காரணத்தினால் 29.09.2025–ம் தேதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 16.12.2025 தேதி அன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

3. இம்மனுதாரர்/எதிரி தரப்பில் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மனுதாரர் கடந்த 29.09.2025 தேதியன்று இவ்வழக்கு வாய்தாவிற்கு ஆஜராகாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதில்லை என்றும் , மேற்படி நாளை தவிர முந்தைய அனைத்து விசாரணைகளுக்கும் தவறாகி ஆஜராகி வந்துள்ளார் என்றும் இந்த வழக்கின் முழு விசாரணை முடிக்கப்பட்டு தற்போது குற்றச்சாட்டு வனைவதற்காக இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர்/எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் அவர் அனைத்து வாய்தாக்கலுக்கும் தவறாமல் ஆஜர் ஆவார் என்றும் இந்நீதிமன்றம் விதிக்கும் எந்தவித நிபந்தனையும் கடைபிடிப்பார் என்றும் தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர்/எதிரியின் பிணை மனுவை ஏற்று மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்க உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவை ஆட்சேபித்து ஆஜரான அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு குற்றச்சாட்டு வனைவதற்காக நிலுவையில் இருந்து வருகிறது. எதிரிக்கு பிணை வழங்கும்பட்சத்தில் மனுதாரர்/எதிரி மீண்டும் தலைமறைவாகி விடுவார் என்றும், மேலும் அவர் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்காமல் தலைமறைவாகி விடுவார் என்பதாலும், மனுதாரர்/எதிரி மீது பல குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்க கடுமையாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

5. இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டது. இந்த பிணை மனுவானது மனுதாரார்/வாதியால் தாக்கல் செய்யப்படும் 2–வது மனு ஆகும். இதற்கு முந்தைய பிணை மனுவான CRLMP No.452/2026

RAMALINGAM V
Digitally signed by RAMALINGAM V
Date: 2026.08.07 15:30:22 +0530

மனுவில் அமர்வு வழக்கு எண்.29/2026 குற்றசாட்டுகள் வனையாமல் நிலுவையில் இருந்து வருகிறது என்றும் மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவித்தால் அவர் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகிவிடுவார் என்றும் மேலும் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகள் போன்ற காரணங்கள் கூறி கடந்த 18.03.2026 தேதி இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

6. மேற்கண்ட வகையில் விவரித்தவாரு இந்நீதிமன்றம் நிலுவையில் உள்ள அமர்வு வழக்கு எண்.29/2026 ஆனது மீண்டும் உடன் குற்றவாளிகள் தலைமறைவாகிவிட்ட காரணத்தால் தற்போது வரை குற்றச்சாட்டுகள் வனையாமல் நிலுவையில் இருந்து வருகிறது எனவே இந்த மனுதாரரை பிணையில் விடும் பட்சத்தில் மீண்டும் தலைமறைவாகி வழக்கு விசாரணை பாதிக்கப்படும் என்பதாலும் முந்தைய பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்ட சூழ்நிலையில் எந்த வித மாற்றமும் இல்லாததால் மனுதாரர்/எதிரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பிணை மனுவினை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் முனைகிறது.

**முடிவில், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07–ம் நாள் திறந்தவெளி நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

RAMALINGAM V
Digitally signed by RAMALINGAM V
Date: 2026.08.07 15:30:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(மு.கூ.பொ)
சிவகங்கை

<u>**பெறுநர்**</u>

1. மனுதாரர்/எதிரி தரப்பு வழக்கறிஞர்

**07.08.2026** **Additional District Judge, Sivagangai**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்

சிவகங்கை

Crl.M.P.No.452/2026

நாள்:18.03.2026